www.Padasalai.Net www.TrbTnpsc.com

# இரண்டாம் திருப்புதல் தேர்வு – 2024

## பத்தாம் வகுப்பு

**நேரம்: 3.00 மணி** **தமிழ்** **மதிப்பெண்கள்:100**

### பகுதி - I (மதிப்பெண்கள் – 15)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 15x1=15

1. மொழி ஞாயிறு என்றழைக்கப்படுபவர் ________
அ) இளம்பூரணர் ஆ) தேவநேயப்பாவாணர் இ) கம்பர் ஈ) இளங்குமரனார்

2. உம்மைத் தொகையைத் தேர்ந்தெடு.
அ) சாரைப்பாம்பு ஆ) தேர்ப்பாகன் இ) வீசுதென்றல் ஈ) அண்ணன் தம்பி

3. ப்ராண – ரஸம் என்பதன் பொருள் ________
அ) ஆகாயம் ஆ) வாசனை இ) உயிர்வளி ஈ) நெருப்பு

4. இலக்கண முறையின்றி பேசுவதும் எழுதுவதும் ________ எனப்படும்.
அ) வழு ஆ) வழாநிலை இ) வழுவமைதி ஈ) பால் வழுவமைதி

5. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன ?
அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால் ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்
இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால் ஈ) அங்கு வறுமை இல்லாததால்

6. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி கருதியது ________
அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்

7. மேன்மை தரும் அறம் என்பது
அ) கைமாறு கருதாமல் அறம் செய்வது
ஆ) மறுபிறப்பில் பயன்பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது
இ) புகழ் கருதி அறம் செய்வது
ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

8. இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் ________
இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் ________
அ) அமைச்சர், மன்னன் ஆ) அமைச்சர், இறைவன்
இ) இறைவன், மன்னன் ஈ) மன்னன், இறைவன்

9. 'அருந்துணை' – என்பதைப் பிரித்தால் ________
அ) அருமை + துணை ஆ) அரு + துணை இ) அருமை + இணை ஈ) அரு + இணை

10. பரிபாடல் அடியில் விசும்பும் இசையும் என்னும் தொடர் குறிப்பது ________
அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்
இ) வானத்தையும் பூமியையும் ஈ) வானத்தையும் பேரொலியையும்

11. இயல்பாய் நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞர் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவது ________ அணி ஆகும்.
அ) தீவக அணி ஆ) தற்குறிப்பேற்ற அணி இ) உருவக அணி ஈ) உவமை அணி

பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளி:–

செந்தீச் சுடரிய ஊழியும்; பனியோடு
தண்பெயல் தலைஇய ஊழியும்; அவையிற்று
உள்முறை வெள்ளம் மூழ்கி ஆர்தருபு,
மீண்டும் பீடு உயர்பு ஈண்டி, அவற்றிற்கும்
உள்ளீடு ஆகிய இருநிலத்து ஊழியும் .....

12. இப்பாடல் இடம் பெற்ற நூல் எது ?
அ) பெரிய திருமால் ஆ) திருப்பாவை இ) பரிபாடல் ஈ) சிலப்பதிகாரம்

13. இப்பாடலின் ஆசிரியர் யார் ?
அ) பெரியாழ்வார் ஆ) கீரந்தையார் இ) செய்குதம்பிப் பாவலர் ஈ) கண்ணதாசன்

POCO

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



14. 'பீடு' என்ற சொல்லின் பொருள் என்ன?
அ) மழை ஆ) சிறப்பு இ) முறை ஈ) வானம்
15. பாடலில் பயின்றுவரும் அடி எதுகையை எழுதுக:-
அ) தண்பெயல், மீண்டும் ஆ) உள்முறை, உயர்வு
இ) உள்ளிடு, பீடு ஈ) அவையிற்று, ஆர்தருபு

பகுதி – II (மதிப்பெண்கள் – 18)

பிரிவு – 1

குறிப்பு :- ஏதேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 21 –க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 4x2=8

16. விடைக்கேற்ற வினா அமைக்க:-
அ) உலகக் காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியா ஐந்தாம் இடம் பெற்றுள்ளது.
ஆ) இயல்பான மொழிநடையை உருவாக்குதல் என்னும் மென்பொருளுக்கு வேர்டுஸ்மித் என்று பெயர்.
17. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக:-
18. பெய்பர் – விளக்குக.
19. பாசவர், வாசவர், பல்நிணவிலைஞர், உமணர் – சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?
20. "சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச்
சுமக்கின்ற ஒல்லித் தண்டுகள்" –
இக்கவிதை அடிகள் உணர்த்தும் உள்ளழகை எழுதுக:-
21. "விடும்" – என முடியும் குறளை எழுதுக:-

பிரிவு – 2

குறிப்பு :- எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 5x2=10

22. வினா எத்தனை வகைப்படும்? அவை யாவை?
23. கலவைத் தொடராக மாற்றுக:-
கூத்துக் கலைஞர் பாடத் தொடங்கினார்.
கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.
24. ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுதுக:-
கும்பகோணம், மன்னார்குடி
25. பகுபத உறுப்பிலக்கணம் தருக:-
மயங்கிய
26. பழமொழிகளை நிறைவு செய்க:-
அ) உப்பில்லாப் பண்டம் ஆ) விருந்தும் மருந்தும்
27. தேவையான இடங்களில் நிறுத்தக் குறியிடுக:-
சேரர்களின் பட்டப்பெயர்களில் கொல்லி வெற்பன் மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை. கொல்லி மலையை வென்றவன் கொல்லி வெற்பன் எனவும் பிற மலைப் பகுதிகளை வென்றவர்கள் மலையமான் எனவும் பெயர் சூட்டிக் கொண்டனர். இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.
28. கலைச்சொற்கள் தருக:-
அ) Symbolism ஆ) Belief

குறிப்பு:- செவி மாற்றுத்திறனாளர்களுக்கான மாற்று வினா
சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக:-
தேன், விளக்கு, மழை, விண், மணி, விலங்கு, செய், மேகலை, வான், பொன், பூ

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பகுதி – III (மதிப்பெண்கள் – 18)

### பிரிவு – 1

குறிப்பு :- எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 2x3=6

29. தமிழர் பண்பாட்டின் விருந்தோம்பலில் வாழை இலைப் பயன்பாடு குறித்து எழுதுக:-

30. புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது.
இது போல் இளம்பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

31. பின்வரும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி:-
வாய்மையைச் சிறந்த அறமாக சங்க இலக்கியங்கள் பேசுகின்றன. வாய்மை பேசும் நாவே உண்மையான நா என்ற கருத்தை, "பொய்யாச் செந்நா" "பொய்படு பறியா வயங்கு செந்நா" என்று இலக்கியங்கள் கூறுகின்றன. நாக்கு ஓர் அதிசயத் திறவுகோல் என்பர். இன்பத்தின் கதவைத் திறப்பதுவும் அதுதான். துன்பத்தின் கதவைத் திறப்பதுவும் அதுதான். மெய் பேசும் நா மனிதனை உயர்த்துகிறது. பொய் பேசும் நா மனிதனைத் தாழ்த்துகிறது.

### பிரிவு – 2

குறிப்பு :- எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்:- 2x3=6
(வினா எண். 34-க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)

32. வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.
33. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை எழுதுக:-
34. செய்யுள் வடிவில் விடை எழுதுக:-
அ) "விருந்தினனாக ஒருவன்" .... எனத் தொடங்கும் காசிக்காண்டம் பாடல் (அல்லது)
ஆ) "மாற்றம் எனது" .. எனத் தொடங்கும் காலக்கணிதம் பாடல்.

### பிரிவு – 3

2x3=6


குறிப்பு :-எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்:-

35. தோட்டத்தில் மல்லிகைப் பூப்பறித்த பூங்கொடி வரும் வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள்.
இப்பத்தியிலுள்ள தொகைநிலைத் தொடர்களின் வகைகளைக் குறிப்பிட்டு விரித்து எழுதுக.
36. இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும். – இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.
37. தீவக அணியை விளக்கி, மூவகை தீவக அணிகளையும் குறிப்பிடுக.

## பகுதி IV (மதிப்பெண்கள் – 25)

குறிப்பு :- அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 5x5=25

38. அ) முல்லைப் பாட்டிலுள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக. (அல்லது)
ஆ) சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன் என்ற தலைப்பில் இலக்கிய உரை எழுதுக.
39. அ) பள்ளித்திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும் அதற்குப் பாராட்டுப் பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக. (அல்லது)
ஆ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.
40. காட்சியைக் கண்டு கவினுற கவிதை எழுதுக.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



41. கொடுக்கப்பட்ட மேல்நிலை சேர்க்கை விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்க.

42. அ) தமிழில் மொழிபெயர்க்க:–

Malar :- Devi, Switch off the lights when you leave the room.
Devi :- Yeah, We have to save electricity.
Malar :- Our nation spends a lot of electricity for lighting up our streets in the night.
Devi :- Who knows? In future our country may launch artificial moon to light our night time sky!
Malar :- I have read some other countries are going to launch these type of illumnation satellites near future.
Devi :- Super news! If we launch artificial moons, they can assist in disaster relief by beaming light on areas that lost power! (அல்லது)

ஆ) ஜல் புயல் சென்னைக்குத் தென்கிழக்கே 150 கி.மீ தொலைவில் மையம் கொண்டுள்ளது. இன்று இரவு சென்னைக்கும் நெல்லூருக்கும் இடையே கரையைக் கடக்கும் என்று சென்னை வானிலை மையம் தெரிவித்துள்ளது.

மேற்கண்ட அறிவிப்பைக் கேட்ட நீங்கள், உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் காப்பாற்றும் வகையில் செய்யும் செயல்களை வரிசைப்படுத்தி எழுதுக.

குறிப்பு:– செவி மாற்றுத்திறனாளர்களுக்கான வினா

காசி நகரத்தின் பெருமைகளைக் கூறுகிற நூல் காசிக்காண்டம். பெண்களுக்குரிய பண்புகள், வாழ்வியல் நெறிகள், மறுவாழ்வில் அடையும் நன்மைகள் ஆகியவற்றைப் பாடுவதாக அமைந்துள்ளது. முத்துக் குளிக்கும் கொற்கையின் அரசர் அதிவீரராம பாண்டியர். அதிவீரராம பாண்டியர் இயற்றிய நூலே காசிக்காண்டம். சீவலமாறன் என்ற பட்டப்பெயரும் இவருக்கு உண்டு. நைடதம், லிங்கபுராணம், வாயு சம்கிதை, திருக்கருவை அந்தாதி, கூர்ம புராணம் ஆகியவை அதிவீரராம பாண்டியர் எழுதிய நூல்கள் ஆகும்.

வினாக்கள்:–

1. காசி நகரத்தின் பெருமைகளைக் கூறுகிற நூல் எது?
2. முத்துக் குளிக்கும் கொற்கையின் அரசர் யார்?
3. காசிக் காண்டம் நூலை எழுதியவர் யார்?
4. அதிவீரராம பாண்டியர் எழுதிய நூல்கள் யாவை?
5. "காசிக்காண்டம்" எந்தெந்தக் கருத்துகளைப் பாடுவதாக அமைந்துள்ளது?

## பகுதி V (மதிப்பெண்கள் – 24)

குறிப்பு :– அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும். 3x8=24

43. அ) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக. (அல்லது)

ஆ) கருணையின் தாய் மறைவுக்கு வீரமாமுனிவர் தம் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விளக்குக.

44. அ) "அறிவியலார் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப் பயணம்" என்னும் தலைப்பில் கற்பனைக் கதை எழுதுக. (அல்லது)

ஆ) "புயலிலே ஒரு தோணி" கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும், அடுக்குத் தொடர்களும் ஒலிக் குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?

45. அ) அரசுப் பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வை கட்டுரையாக்குக. (அல்லது)

ஆ) 'சான்றோர் வளர்த்த தமிழ்' – என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

POCO
DEVA 07

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com